**STARTING TIME 11.07 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 117/2025**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigai Selvam, Senior Bailiff of this court, on 15.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : நடராஜன் Father's Name : குப்புசாமி

Address : எண்.4, பாட்டை தெரு, ரங்காபுரம், பானாவரம் அஞ்சல், சோளிங்கர் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 56

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .**

1. நான் தற்சமயம் அரங்காபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். தாவா சொத்து பானாவரம் மோட்டூர் கிராமத்தில் உள்ளது என்றால், சரிதான். நான் வசிக்கும் இடத்தில் இருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் தாவா சொத்து உள்ளது என்றால், சரியல்ல, ஒரு கிலோ மீட்டர் துரத்திலேயே உள்ளது. தாவா சொத்து இருக்கும் ஊரில் எனக்கு சொந்தமான சொத்து எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

2. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், சர்வே எண் 480/1 ஆகும். அது நஞ்சையா அல்லது புஞ்சையா என்றால், இரண்டும் இல்லை, கிராம நத்தம் ஆகும். அதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். என்ன ஆவணங்களை எங்கு வைத்து பார்த்தேன் என்றால், குமரேசன் என்பவர் வீட்டில் வைத்து கிரையப் பத்திரத்தை பார்த்தேன். குமரேசன் எனக்கு நெருங்கிய

நண்பரா என்றால், ஆமாம்.

3. தாவா சொத்தின் கிழக்கு மேற்கு, வடக்கு தெற்கு அளவுகள் தெரியுமா என்றால், தற்போது நினைவில் இல்லை. தாவா சொத்தின் கிழக்கு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்றால், சரிதான். அந்த சொத்தின் கிராம நத்தம் சர்வே எண் 480/2 என்றால், சரிதான். தாவா சொத்தின் கிழக்கு பக்கம் உள்ள அந்த 480/2–ல் உள்ள சொத்தில் தான் பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால், சரிதான்.

4. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தம் என்பதற்கு வருவாய் ஆவணங்கள் எதையும் பார்த்தேனா என்றால், இல்லை. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் பதிலுரை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால், தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் பிரதிவாதிகள் மாட்டு தொழுவம் கட்டி அனுபவித்து வருகிறார்கள் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அது போல் பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் சொல்லியுள்ளார்களா என்றால், அது பற்றி தெரியாது. அது போல் பிரதிவாதிகள் தாவா சொத்தில் மாட்டு தொழுவம் எதையும் கட்டி அனுபவித்து வரவில்லை என்றும், அது போல் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான மாடுகள் எதுவும் இல்லை என்றும், மாட்டு தொழுவம் கட்டியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

5. 1–ம் வாதி அலமேலு அம்மாளை தெரியுமா என்றால், தெரியும். அவர் கணவர் பெயர் என்னவென்றால், முருகேசன் ஆகும். அவர்களுக்கு விவசாயம் தான் பிரதான தொழில் என்றால், சரிதான். தாவா சொத்தை வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும், நான் வழக்கிற்காக வேண்டி பிரதிவாதிகள் அனுபவித்து வருவதாக தவறாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் எனக்கு

வேண்டியவர்கள் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 11.21. A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.15 17:24:09 +0530